உ

திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 28 ‖ பிங்கள ஞு மார்கழி இதழ் 1 உ [ 16—12—77 ‖ இதழ் 12

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

## "குமரகுருபரன்" விடை பெறுகிறுன்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இருபதாவது அதிபராக விளங்கியருளி ஒல்லும் வகையான் ஓவாதே எண்ணரிய அறக் கட்டளைகள் நிறுவிய பெருங் கொடை வள்ளல் முனிபுங்க வருமாகிய பெருந்தவச் செல்வர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் தோற்றுவிக்கப் பெற்ற "குமரகுருபரன்" தெய்வீக திங்கள் இதழ் சென்ற இரு பத்தொன்பது ஆண்டுகளாக சைவசித்தாந்தம், ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் பிரபந்தம், பன்னிருதிருமுறை ஆராய்ச்சி, இலக்கியம், பிறமொழிகள், கலாச்சாரம் சம்பந்தமான பல துறைகளில் தன்னளவில் தொண்டாற்றி சந்தா நேயர்களின்

பரிபூரணத் திருப்திக்குப் பாத்திரமாகி நின்ற குமரகுருபரன் இவ்வாண்டு இறுதியுடன் விடை பெற்றுக்கொள்வதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேம். இம்மாத(பிங்கள வருஷம் மார்கழி மாத) குமரகுருபரன் இதழே நம்பத்திரிகையின் கடைசி இதழாகும்,

தன்னலங் கருதாது சிரிய பொது நோக்குடனும் ஆர்வத்துடனும் அன்புடனும் அயராது குறித்த காலத்திலும் சிறந்த கட்டுரைகள் வழங்கி தமிழன்னேக்குப் பெரும் தொண்டு புரிந்த தியாகவுள்ளம் படைத்த நம் கட்டுரையாளர் நண்பர்களுக்கும் சந்தா நேயர்களுக்கும் ஆசிரியக் குழுவினருக்கும் கலேக்கோவில் சிப்பந்திகளுக்கும் குமரகுருபரன் வணக்கமும் நன்றியும் தெரிவித்து ஆசிவிடை பெறுகிறுன்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இருபத்தோராவது அதிபராக எழுந்தருளி அருட்செங்கோல் நடத்தியருளும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் அரவணேப்பிற்கும் அருள் நோக்கிற்கும் ''குமர குருபரன்'' திங்களிதழ் பாத்திரமாகி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் ஷெஇதழின் வளர்ச்சிக்கான அறிவுரைகள் அவ்வப்போது வழங்கியும் அன்புடனும் ஆர்வத்தோடும் உதவிகள் பல புரிந்தும் கட்டுரையாளர்கள் தேர்ந்தெடுத்தும், பன்னிருதிருமுறை தெளிவுரை ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவதற்கான வழி கோலியும் அவர்கஊ ஊக்குவித்தும் குமரகுருபரன் வளர்ச்சியில் தோன்ருத் துணையாக நின்று ஆதரவு வழங்கியருளியஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுக்கும் தமிழுலகம் என்றும் கடமைப் பட்டுளது.

திருச்செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க.
வளர்க குமரகுருபரன் தொண்டு, வளர்க நற்சைவம்
வாழிய நற் செந்தமிழ்!

ஸ்ரீவைகுண்டம்
1—12—77

K. சுப்பிரமணியன்
கௌரவ நிர்வாக ஆசிரியர்,

*''ஆறிரு தடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய்தனி வேல் வாழ்க: குக்குடம் வாழ்க: செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க; யானேதன் அணங்கு வாழ்க:
மாறில்லா வள்ளி வாழ்க; வாழ்க சீர் அடியார் எல்லாம்''*

திருச்சிற்றம்பலம்

# "ஐயாறடைகின்ற போது..."

திரு. சு. சோமசுந்தரம், எம். ஏ.
உதவிப் பேராசிரியர், தத்துவத்துறை பூம்புகார்ப் பேரவைக்கல்லூரி,
பூம்புகார், மேலையூர்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய பரம்பொருள் நிலந்தன் மேல் வந்து நீள் கழல்கள் காட்டிய கருணைச் செயல்களைக் கண்ட சமயம் நம் சைவம். அவனருளே கண்ணாகக் கொண்டு இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று அறிய வொண்ணாத இறைவனைத் தோடுடைய செவியன் என்றும், பித்தன் என்றும், தீயாடும் கூத்தன் என்றும் கண்டு, சுட்டிக்காட்டி இன்புற்ற அடியார் பலரைக் கொண்டது நம் சமயம். தாம் பெற்ற இன்பம் இந்த வையம் பெற வேண்டும் என்ற கருணை காரணமாகவும் இறையாளுமை பொங்கிப் பிரவாகமாகப் பெருகி ஊற்றெடுத்ததாலும், தாங்கள் பெற்ற அனுபவத்தைப் பாமாலைகளாக அமைத்துக் கொடுத்தனர் அந்தப் பண்புடையோர்.

அவர்கள் அனுபவம். ஐந்து பேரறிவும் கண்களே கொள்ளும் அனுபவம். அளப்பரிய கரணங்கள் நான்கும் சிந்தையேயாகும் அனுபவம். குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவீகமேயாகும் அனுபவம். மாறிலா மகிழ்ச்சியில் திளைக்கும் அனுபவம். உவட்டாமல் இனிக்கின்ற அனுபவம். தேனாய் இனிய அமுதாய்த் தித்திக்கும் அனுபவம்.

அப்படிப்பட்ட அடியவரில் ஒருவர் அப்பரடிகள் அல்லவா? அவர் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று கூறி, இறைபணி செய்து, இரவும் பகலும் பிரியாது வணங்கிக் கிடந்தவர் ஆவர்.

சிந்தையே கோயில் கொண்ட சிவபெருமான் தொண்டையே செய்து கொண்டு வந்த வாகீசர் ஒருநாள் மாலை திருவையாறு வந்தடைந்தார். ஐந்து ஆறுகள் வந்து அடை

கின்ற தலம் அது மாதர் பிறைக் கண்ணியானை, மலையான் மக ளொடும் பாடி, போதொடு, நீர் சுமந்து, நில்லாத நீர்சடை மேனிப்பித்தானை, ஏத்திச் செல்லும் அடியார் கூட்டத்தினைக் கண்டார். பத்தியாலுந்தப்பட்ட அப்பரடிகள் தாமும் கலந்து கொண்டார். ஆடுவோரும், பண்ணோடு பாடுவோருமாகச் சென்று கொண்டிருந்தது அடியார் கூட்டம். அந்த ஆட்டத் துக்கும், பாட்டுக்கும் நடுவில் ஏதோவொன்று குறைவு படுவ தாகத் தோன்றியது நம் அடிகட்கு.

வாயால் பாடுகின்றார்கள். கையால் தாளம் போடுகின் றார்கள் அதற்கேற்ப ஆடுகின்றார்கள். இசையைச் செவிமடுக் கின்றார்கள். ஆனாலும், ஒன்று மிக முக்கியமான ஒன்று குறைகின்றதே. என்ன அது, என்று சிந்திக்கின்றார் பக்தியா? இல்லை, பக்தி மிகுந்தவர்கள் போன்று காணப்படுகின்றார்கள். ஆண்டவன் மாட்டு அவர்கள் கொண்ட பக்தியில் குறை காண அப்பர் விரும்பமாட்டார். சரீரத்தால் மட்டுமே கூட ஆண்டவர்க்குச் செய்யும்பணி பக்தியின் பாற்படும் என்று அவருக்கு நன்றாகத் தெரியும் ஆனால் ஒரு குறை என்னகுறை?

இவர்கள் ஆலயத்துக்குச் செல்லும் நியதிகளில் குறை யில்லை. நீராடியவர்களாகத் தெரிகின்றார்கள். போது, நீர் சுமந்து, புகழ்ந்தேத்திச் செல்லுகிறார்கள் அதுவல்ல குறை. இந்தச் சூழ்நிலையில் அடிகளார் ஒரு காட்சியைக் காணுகிறார்.

எங்கிருந்தோ வரும் முகிற் கூட்டம் ஒன்று, இரண்டு திட்டாகப் பிரிகின்றது. இறையை இயற்கைக் காட்சிகளிலும் கண்டு மனம் லயிக்கும் அப்பரடிகள் இதைக் காண்கின்றார், அவர் காதுகளில் அடியவர் பாடும் இசை பின்னணியாக ஒலிக் கின்றது. கூப்பிய கைகள் கூப்பியவாறே கூட்டத்தோடு நடக்கின்றார். வாய் வாழ்த்துகின்றது. அவர் கண்கள்இரண்டு திட்டுகளாகப் பிரிகின்ற மஞ்சுத் திரளையே நோக்க நடந்து கொண்டிருக்கிறார். கேட்டும் கேளாத நிலை நடந்தும் நடவாத நடை.

இரண்டாகப் பிரிந்த மேகங்களில் ஒன்று களிறாகவும், இன்னொன்று பிடியாகவும் தோன்றுகிறது அப்பருக்கு. இந்த

நேரத்தில், மாலைமதியம், நிலாக்கீற்று உலாவர ஆரம்பிக்கிறது,

அப்பர், தன்னை மறந்து அக்காட்சியில் மனம் பறி கொடுக்கின்றார். அவருக்குத் தான் போகும் வழியும் தெரியவில்லை. வந்த வழியும் தெரியவில்லை தன்னைச் சுற்றியும், முன்னும் பின்னும் உள்ள அடியார்களின் ஆட்டமும் பாட்டும் அறவே தெரியவில்லை. தன்னுடைய புலன் பொறிகள் இயங்குகின்ற சுவடும் பிடிபடவில்லை. மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் அறிவு தரும் ஆறுகள் அடைபட்டுப் போகின்றன. அதுமட்டுமா?

காதல் மடப்பிடியாகவும், களிறாகவும் தோன்றிய கரு மேகக் கூட்டங்கள், நிலவின் பின்னணியில் ஐயாறப்பனாகவும், அம்மையுமாகவல்லவா காட்சி தருகின்றார்கள்? அவர் தம் திருப்பாதமல்லவா காணப்படுகின்றது? என்றும் கண்டறியாத அனுபவம் எல்லாப் புலன்களும் செயல்பட்டபோது பெறப்படாத அனுபவம்.

இந்த அனுபவ நிலையில் அப்பர் சுவாமிகள் பாட ஆரம்பிக்கிறார்.

"மாதர் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர்திருப் பாதம்
கண்டறி யாதன கண்டேன்"

"ஐயாறு அடைகின்ற போது கண்டறியாதன கண்டேன்" என்று பாடுகின்றார்.

பாடிப் பரவிச் சென்ற அடியவர் அப்பர் சுவாமிகள் பெற்ற அனுபவம் பெறவில்லையே? என்னகுறை? அப்பர்

கூட ஏதோ குறையிலிருந்தாற்போல் உணர்ந்தார் போலிருக்கிறதே! என்ன குறை? ஆம், அதுதான் அப்பரடிகள் ஐவாய் வழிச் செலும் அவாவினை அடைத்தார், இல்லை. அந்த ஆறுகள் ஆண்டவன் காட்சியென்ற அனுபவம் அடைந்தன. வேறெங்கும் செல்லாமல் அடைபட்டன. அவை இருந்த சுவடுபடாமல் அடைபட்டன. மேகக் கூட்டம் களிறுகப் பிடியாக, களிறும் பிடியும், நம்பிரானும், நம்பிராட்டியுமாக, யாரும் கண்டறியாக்காட்சி தோன்றியது, தோன்றியபோது 'கண்டறியாதன கண்டேன்' என்று நாவுக்கரசரே தன் ஆற்றாமையை நவிலும் அனுபவம் ஆயிற்று.

புலன்வழி வருவது இன்பம். புலன் வழிகள் ஐந்தும் (ஐயாறு) அடைபடும் போது வருவது பேரின்பம். புலன்வழி அடைபடாத அடியவர்க்கு, அந்த ஒரே ஒரு குறையினால் அடிகளாரின் அனுபவம் ஏற்படவில்லை,

மெய் முதலான ஐந்து ஆறுகள் அடைபடும் சந்நிதானம் ஆண்டவன் சந்நிதானம், அறிவுத்தேரிழுக்கும் ஐந்து புலன்கள் அடையும் வழியும், வழியின் முடிவும் அவனே என்று காட்டுவதுதானே, அப்பரடிகளின் ஐயாறு அடைந்த அனுபவம்?

# பற்றற்ற கண்ணே பிறப்பறும்

வித்துவான் திரு. வை, திருஞானசம்பந்தன் அவர்கள்,
ஈரோடு,

---

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயலையோ!
எல்லாமற என்னையிழந் தநலம்
சொல்லாய் முருகா! சுரபூபதியே!

தெளிவுரை:- முருகப் பெருமானே! விண்ணுலகத்திலுள்ள தேவர்களுக்கும் மண்ணுலகத்திலுள்ள மக்களுக்கும் தலைவனே! இன்பமுடையவரும். எக்காலத்திலும் துன்பமில்லாதவரும் சிவயோக மூர்த்தியாய் விளங்குகின்றவரும், பிரணவப் பொருளை இனிமையாக உபதேசிக்கின்றவரும், மலைகளிருக்குமிடமெங்கும் மகிழ்ச்சியுடன் எழுந்தருளியுள்ளவரும், அடியவர்களின் பக்குவத்திற்கேற்றவாறு திருவிளையாடல்களைச் செய்கின்றவருமாகிய எம்பெருமான் தாங்கள் அல்லவோ? ஆனபடியினல் என்னுடையன என்று சொல்லப்படுகின்ற புறப்பற்றுக்களும் யான் என்று சொல்லப்படுகின்ற ஆணவ முனைப்பினுல் எழுகின்ற அகப்பற்றும் ஆகிய இரண்டும் அற்றுப்போக அதனுல் விளைகின்ற பேரின்பமாகிய அருள் நிலையை அடியேனுக்கு உபதேசித்தருள் வீராக என்று வேண்டுகிருர்.

விளக்கவுரை:-

உல்லாச! ஆறுபடை வீடுகளில் முதன்மையாகவுள்ள திருப்பரங்குன்றத்தில் முருகன் உல்லாசமாக வீற்றிருக்கின்ற நிலையைக் குறிக்கும். முருகன் சூரபன்மனை வென்று திருப்பரங்குன்றில் எழுந்தருளினுர். இந்திரன் தன் மகள் தெய்

யானையை முருகனுக்குப் பரிசாகத் திருமணம் செய்து கொடுக்க, ஏற்றுக் கொண்ட முருகன் மனக்களிப்புடன் வீற்றிருக்கின்ற நிலையை விளக்குகின்றது.

ஜீவான் மாக்களெல்லாம் பெண்கள். பரமாத்மா தலைவன். ஒரு பெண் மணம் செய்து கொண்டு தலைவனையடைவது போல உயிர்களாகிய நாம் முதிர்ச்சியுற்று முருகனாகிய தலைவனை யடைதல் வேண்டும். இதனை விளக்குதற்கே முருகன் தெய்வயானையை மணம் செய்து கொண்டு உல்லாசமாகத் திருப்பரங்குன்றத்தில் வீற்றிருக்கின்றார். நாடக மேடையில் நடிகன் அரசனாக நடித்தாலும் நாடகம் முடிந்தவுடன் அவன் சாதாரண மனிதனாகவே ஆகிவிடுகின்றான். அதுபோல நாம் ஆண்களாகவும் பெண்களாகவும் பிறந்திருந்தாலும் காலம் முடிந்தபின் 'உயிர்' என்கிற ஒரே நிலையில் இருக்கின்றோம். இதனைத் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியில் "உரகக் கங்கணக் கருவையான் ஒருவன் நின்றாட்ட, பரவை சூழ்நில மன்பதைப் பரப்பெலாம் நடிக்கும், என்று வருவதன் மூலம் உணரலாம்.

அடியவர்கள் முருகனுடைய திருவடிகளையடைய வேண்டும் என்ற விருப்பத்தோடு திருப்பரங்குன்றிற்குச் செல்வார்களேயானால் திருவடிப் பேற்றைப் பெறுதலோடு உள்ளத்தில் விரும்பிய பொருள்களையெல்லாம் விரும்பியவாறு பெறுவர் என்பதை,

"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கை புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை யாயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்(து) இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே"

என்ற திவுமுருகாற்றுப் படையால் உணர்க.

நிராகுல: நிர் = இல்லை, ஆகுலம் = துன்பம், துன்பமில்லாதவன் என்பது பொருளாகும். முருகன் திருச்செந்தூரில் துன்பமற்ற நிலையில் வீற்றிருக்கின்றார். துன்பமில்லாதவன் எனின் இன்பமயமானவன் என்பதாகும். பிறருடைய துன்

பத்தைத் தனக்குற்ற துன்பமாகக் கருதி அதனை நீக்குதலே அறிவுடையோர்க் கழகு என்பதைத் திருவள்ளுவர்,

> அறிவினால் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
> தந்நோய்போல் போற்றாக் கடை:

என்று கூறியுள்ளார்.

ஞானமயமாய் இருக்கின்ற முருகனுடைய நிலையோவெனில் கூறுந்தரமன்றே? அமரர்கள் அசுரர்களால் துன்புற்ற போது ஞானவடிவினராகிய முருகன் ஞானவேலால் அசுரர்களை அழித்து ஆறுமுகங்களுடன் பன்னிரு கரத்தனாய் உலகத்தவர்கள் புகழ்ந்து பேசும் படியாகத் திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ளார் என்பதைத் திருமுருகாற்றுப்படை.

> பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
> விசும்பா றாக விரைசெலல் முன்னி
> உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
> அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே.

என்று கூறுகிறது.

யோக:- பழநியில் யோகநிலையில் ஞானபண்டிதனாக விளங்குகின்ற நிலையைக் குறிப்பதாகும். தவம் செய்யச்செய்ய இன்பம் தானே வரும். பிறர் அழிவதற்காகவும், தான் வாழ்வதற்காகவும், உலகம் உய்வதற்காகவும் செய்யப்படுகின்ற மூன்று நிலையிலான தவத்தில் உலகம் உய்ய வேண்டி மூன்றுவது நிலையில் முருகப் பெருமான் மலைமேல் காட்சியளிக்கின்றார். தவத்தால் இன்பம் பெறலாம். தலைவி தலைவனுடன் தன் உற்றார் உறவினரைப் பிரிந்து தனித்து நிற்கும்போது சிற்றின்பம் பெறுமாறு போல ஜீவான்மாபந்த பாசங்களிலிருந்து விடுபட்டுப் பரமாத்மாவுடன் ஒன்றியபோது பெறுகின்ற இன்பமே பேரின்பமாகும்.

அடிவாரத்திலுள்ள இடம் திருவாவினன் குடியாகும் திரு+ஆ+இனன்+கு+டி, அதாவது திருமகள், காமதேனு,

சூரியன், பூமி, நெருப்பு ஆகிய ஐவரும் யோகம் செய்து பேறு பெற்ற தலமாதலின் திருவாவினன்குடி என்று வழங்கப் படுகிறது. ஆனல் மலைமேல் போகர் நவ பாடாணங்களினுல் மூர்த்தியை எழுந்தருளச் செய்து வழிபட்டதாக வரலாறு. சித்தன் வாழ்வு என்று திருமுருகாற்றுப் படை கூறுவதும் இக்காரணம் பற்றிபோலும். திருவாவினன்குடியில் அயன் சிறையினின்று விடுபட்டு, சிவன் முதலிய மும்மூர்த்திகளும் முன்போல் தலைவர்களாக, தேவர்களெல்லாம் அந்தரத்தில் நின்று வழிபட தெய்வயானையாருடன் என்று சிலரும் வள்ளியுடனென்று சிலரும் கூறும்படியாகச் சின்னுள் ஆவினன்குடியில் எழுந்தருளி அருள் செய்கின்றுர்.

அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னுள்
ஆவினன் குடியசை தலும் உரியன்'

என்பது திருமுருகாற்றுப்படை,

இனி உல்லாசம் என்றுல் உண்மை. அதாவது சத்து நிராகுல என்றுல் அறிவு அதாவது சித்து, யோகம் என்றுல் இன்பம். அதாவது ஆனந்தம் சத்துசித்து ஆனந்தம் எனவே திருமுருகப்பெருமான் சச்சிதானந்த சொருபியாக விளங்கும் நிலையை விளக்கிய அருணகிரிநாதப் பெருமானின் சொல்லாட்சியை எங்ஙனம் வியத்தல் இயலும்,

இத:- இனிமையாகப் பேசுகிறவர் என்பது பொருள். பலவித ஆற்றலுடையவர்களானுலும் அவர்களிடம் காரியத்தைச் சாதிப்பதற்கு இதமாகப் பேசி வெற்றி பெற வேண்டும். சிவபெருமான் முருகனை மடிமீதமர்த்திக் கொண்டு 'ஓம்' என்னும் பிரணவத்தின் உண்மைப் பொருளை முருகனுல் உபதேசம் பெற்ற தலம் சுவாமி மலையாதலின் இதனையே திருவேரகம் என்றழைப்பர். சுவாமியாகிய சிவனுக்கு நாதப் பொருளை உணர்த்தியமையின் முருகன் இங்கு சுவாமி நாதராக எழிந்தருளியுள்ளார். திருமுருகாற்றுப் படையில்

வருகிற திருவேரகம் என்பது மலைநாட்டகத்தோர் திருப்பதி என்று நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் கூறியுள்ளனர்.

சல்லாப:- மலைகளுள்ள இடங்கள் எல்லாவற்றிலும் விரும்பி எழுந்தருளி தன்னை நாடி வருகின்ற முருக பக்தர்களிடம் சல்லாபம் செய்து கொண்டிருக்கின்ற நிலையைக் குறிப்பதாகும் திருத்தணி மலையில் இச்சா சக்தியாகிய வள்ளியம்மையாருடன் சல்லாபித்துக் கொண்டிருக்கின்றார். அவ்வாறே மருதமலை, விராலிமலை, மயிலமலை போன்ற இடங்களிலும் எழுந்தருளியுள்ளார்.

வெட்சி மாலையணிந்து வேய்ங்குழலையூதி மயிலை வாகனமாகக் கொண்டு சேவலங் கொடியை உயர்த்தி கந்தருவ மகளிருடன் நிலந்தோயும்படியாக ஆடையணிந்து கையில் வேலை ஏந்தி குன்றுதோருடல் குமரனுக்குக் கொண்டாட்டம் என்பதை,

*மருங்கில் கட்டிய நிலனேர்பு துகிலினன்*
*முழவுறழ் தடக்கையில் இயல்வேல் ஏந்தி*
*மென்தோள் பில்பிணை தழீஇத் தலைதந்து*
*குன்றுதோ ருடலும் நின்றதன் பண்பே,*

எனவரும் திருமுருகாற்றுப் படையால் உணர்க.

வினோதனும் நீ:- பழமுதிர் சோலையில் ஞானபண்டிதனாக வீற்றிருந்து வேதாகமங்களை விசாரணை செய்து கொண்டு நாடிவருகிற அடியவர்களுக்கு 'வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்ற அப்பரடிகளின் அருளுரைக்கேற்றவாறு அருளையும், பொருளையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

தெய்வீக மணங்கமழும் படியான தனது அழகிய வடிவினை அடியவர்களுக்குக் காட்டி எண்ணிய காரியத்தை எண்ணியபடியே முடித்துத் தருகிறேன். அஞ்சாதே! கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் ஒப்பில்லாதவனுக

விளங்கும்படி சிறந்த பேரின்பத்தையும் பெறுக என்று விற்றிருக்கின்றார்.

"தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவில்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி பலவுடன்".

என்பது திருமுருகாற்றுப்படை.

எல்லாமற என்னை இழந்த நலம்:— எந்தப் பொருளில் பற்றுக் கொள்கின்றோமோ அதனால் நமக்குத் துன்பமேயன்றி இன்பமில்லை, மண் பெண் மக்கள் பொருள் இவைகளின் மேல் கொண்ட புறப்பற்றுக்களையும் நான் என்ற அகப்பற்றையும் விடுதல் வேண்டும். இம்மையில் பொருளைத் தேடுவதாலும் அவற்றைக் காத்தலாலும் பின்இழத்தலாலும், மறுமையில் வருகிற பாவத்தாலும் என்று இருவழியிலும் துன்பம் தொடர்கிறது. எனவே எந்தப் பொருளிலிருந்து நாம் விலகி நிற்கிறோமோ அந்தப் பொருளால் நமக்குத் துன்பம் இல்லை. தேவர்களாலும் பெறுதற்கரிய வீட்டுலகை அடைய வேண்டுமாயின் பற்றுக்களை அறுக்க வேண்டும்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்".
"யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம்

என்றார் வள்ளுவர்

திருஞானசம்பந்தரின் திருமணத்திற்குச் சென்றவர்கட்கெல்லாம் முத்தி கிடைத்ததையறிந்துமடத்திலிருந்தஅடியவர்கள் நானும் போவேன் நானும் போவேன் என்று ஒருவரோடொருவர் வாது செய்து கொண்டிருந்தனராம். அங்கு அலகிட்டுக் கொண்டிருந்த மூதாட்டியார் கண்டு 'நான் போனால் போவேன்' என்று சொன்னபோது, அடியவர்கள், எங்களாலேயே போக முடியாத போது நீ எப்படிப்

போவாய்' என்று கேட்டனர். அதற்கு அத்தாய் "நான்" என்ற ஆணவம் என்னைவிட்டு விலகினால் போவேன் என்று கூறி ஆணவத்தை அடக்கியதாக சிவப்பிரகாச சுவாமிகள் அரிய கருத்தை எளியமுறையில் விளக்கியுள்ளார்கள்.

ஆணவம் என்ற கிழங்கைத் தோண்டி எடுத்த அடியவர்களின் உள்ளத்தில் முருகன் விளக்கைப் போல் ஒளி வீசிக் கொண்டு இருக்கின்றார். முத்தி நெறியறியாத நான் மூர்க்கர்களுடன் கூடி முயன்றபோது பத்திநெறி இன்னது என்பதை அறிவித்து எனது பாவ வினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் என்று மணிவாசகப் பெருந்தகை தாம் பெற்ற பேற்றை விளக்கியுள்ளார்.

தருமையாதீனத்தில் எழுந்தருளியுள்ள குருமகா சந்நிதானத்தை அண்டிய போது வெறும் ஜீவனாக இருந்த நான் சிவனாக மாறிவிட்டேன் என்பதை 'நற்கமலை ஊரில் குறுகினேன் ஓர் மாத்திரையளவு என்பேரில் குறுகினேன் பின்' என்பது பண்டார மும்மணிக்கோவை. இப்படிப்பட்ட நலத்தைப் பெறுவது எனின் அவனருளாலே அவன்தாள் வணங்க வேண்டும்.

சொல்லாய் முருகா:— உல்லாச நிராகுல யோக இத சல்லாப விநோதனாக இருக்கின்ற நீ— ஆதி அருணாசலம் அமர்ந்த ஆறுமுகமான பொருளாகிய நீ அருள் உபதேசத்தை அடியேனுக்கு அருள் செய்வாயாக என்று வேண்டுகின்றார்.

முருகு என்ற சொல்லிற்கு அழகு, இளமை, மணம், தெய்வீகத்தன்மை என்பது பொருளாகும். தமிழ் நாட்டிற்கே தனி நாயகராக விளங்குகின்ற முழுமுதற் கடவுள் முருகன் என்று பெயர் பெற்றது இயற்கை. நமது உள்ளத்தில் என்றும் நின்று நிலவுமாறு முருகனுடைய நாமத்தை நாவின் இருமருங்கும் பொருந்தும்படியாகப் பாடிக் கொண்டே இருந்தால் [நாவின் மருங்கின் நவிலப் பாடி-

திருமுருகாற்றுப்படை] அம்முருகன் ஓடிவந்து அருள் செய்வார். அவருடைய திருவடிகளை நமது தலைமேல் தாங்கி அருள் செய்வார், இதைவிடப் பெறுதற்கரிய பேறு வேறு ஏது?

நெஞ்சில், ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்!

— திருமுருகாற்றுப்படை வெண்பா.

முருகா என ஓர்தரம் ஓதடியார் முடிமேல்
இணைதாள் அருள்வோனே!

— திருப்புகழ்

முருகா என்று ஒருமுறை ஓதினல் முருகன் இருமுறை வந்து தோன்றுவான். இனி முருகா உனது திருவடிகளை அடைவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை என்று சபதம் கூறி ஒற்றைக் காலில் நின்று கொண்டு முருகா என்று ஓதினல் முருகன் இரண்டு கால்களினலும் நடந்து வந்து அருள் செய்வான் என்பதும் பொருளாகக் கொள்ளலாம்.

சுரபூபதியே!:— அமிழ்தம் உண்ட தேவர்கட்கும் அவன் அரியவனுகையால் சுரபதி என்றூர். மறுமை இன்பத்திற்கும் இம்மை இன்பத்திற்கும் தலைவன் முருகனே யாதலின் சுரபூபதியே என்றூர்.

———

# ஜோதிடமும் அதன் கணிததத்துவத்தில் நாமும்

திரு. இராம குமாரசுவாமி அவர்கள்,
தலைவர் சைவப்பிரகாச வித்தியாசாலை,
உடன்குடி (நெல்லை மாவட்டம்)

---

## மரணமிலாப் பெருவாழ்வைக் காணவாரீர்!

*ஆன்மீக அனுபவக் கண்ணுள்ளோரே! அல்லதுசெவி தருவோரே! வேறென்ன! செவிதருக, சிந்தியுங்கள்! அம்மட்டே*

உண்மையிலேயே இத்தலைப்பில் கண்டிருக்கிற ஜோதிடமும், கணிதமும்.

நம் கண்கள் தனித்து எதையும் காணமுடியாது. காண வேண்டுமானால், செயற்கை விளக்கேற்றியோ, அல்லது உலகோர், இருளையகற்றும், கதிரவன் ஒளி மூலமாகவோ, காண முடியுமாப் போல்; ஞான குருவின்றி சீடன் எதையும் காண்வே முடியாது.

விழிகன் குருடர்களையெல்லாம், வழிநடக்கச் செய்ய வழிகாட்டியான ஞான குருவந்தாகவே வேண்டும்,

புத்தக படிப்பை மட்டும் மனப்பாடம் பண்ணியதால், அனுபவ நூலில்வரும் உண்மை விளக்கத்தைக் கண்டுய்ய முடியாதென்பதே இதன் கருத்தாகும்! நூலிலிருந்தேதான் உயிரணுக்கள் பலதோன்றி ரூபமற்ற அணுக்கருவில் உருவாகி காட்சிதருகிறது.

எங்கும் நிறைந்து எல்லா உயிர்களுக்கும், உயிரூட்டும் என்றுமுள்ள உயிரணுப் பொருளை உணர, உணர, காணக் காண; எல்லா உயிர்களிடத்திலும், கருணை பெருகும். அதனால் அருள் பெருக்கெடுத்தோடும். அதுமூலம் முத்தி நிலையும் எய்தும். அதனால் தன்னை அவைகளினின்று வேறு படுத்திக் காணவும் முடியாது, காரணம் எல்லா ஜீவராசிகளிடத்திலும் அதுவேதான்.

பொதுவாக எல்லா வகைகளுக்குமே, ஜீவகாருண்ய (விலங்களுக்கல்ல) மனித இனத்திற்கு மட்டும் முதலிடமாக அமைந்தது.

எவ்வுயிரும் பராபரன்தன் சன்னதியாகும். இலங்கும் உயிர் உடலனைத்தும், ஈசன் கோயில் என்ற ஒன்றுபட்ட எண்ணம் அனுபவ முறையில் அறிந்து தெளிய வேண்டும். அவ்வித மேலான அருளைக் கண்டு காண்பதைத் தவிர, அது இப்படிப்பட்டது. இன் சிறத்தையுடையது, இவ்வண்ணத் தைப் பெற்றது என்று அதன் உருவின் வடிவழகை, பிறருக்கு எக்காரணங் கொண்டும். எந்தவகையிலும், யாரும் வாக்கால் சொல்லவோ. எழுதிக் காட்டவோ, முடியவே முடியாதென்பதே வேதத்தின் முறையீடும். நம்அனுபவமும், ஏன்? உலகிலேயே சொல்வதற்கு மொழி கிடையாது

பொதுவாக, விறகினில் தீ இருப்பது போலவும், பாலி னுள் அடக்கமாக, நெய் இருப்பது போலவும், இரும்பில் காந்தம் மறைந்திருப்பது போலவும், வெண்கல மணியில் ஓசையொலி மறைந்திருப்பது போலவும், நம் உடலில் உயிரணு ஒளி தோன்றாத் துணையாக இருப்பதை, வழிகாட்டி ஞானகுரு மூலம் அறியும் அறிவால் அறிய வேண்டுவதே

நூல் என்றாலே ஒரே ஒரு நூல்தான், நூலென்பது வழி காட்டியருள்வதுதான். நூல்கள் பல அல்ல!... வேதங்கள், மதங்கள், அதன் மொழிகள் பலவாறாக இருக்கலாமே தவிற, இவைகளுக்கெல்லாம், வழிகாட்டியருள்வது நூல் ஒன்றே ஒன்றுதான். அவ்நூலில்வரும் கண்கொள்ளா காட்சியின் உட்பு பொருளின் தத்துவ அனுபவ முறையீட்டையும், இது காறும் வழிபடும் புறம்பான ஆலயவழிபாட்டின் அமைப்பின் தன்மையையும் தெரிந்து தெளிந்தவர்கள் யார்!......

குருவழி நடப்போர்களே! அவர்களுக்கேதான் அகமும் புறமும், அதாவது, நூலும், ஆலயமும், பயன்பெறும். மற் றும் ஏனைய வழிபடும் புக்தர்கள், வெளிப்படையாக நம்பிய வர்கள், திசைதிக்குத்தெரியாமல் இருப்பவர்கள். வழிகாட்டி மூலம் வழி நடக்க முற்படுவார்களாக!

தவிரவும். வழிகாட்டியல்லாது நம்பிக்கை கொண்டு வணக்கம் செய்யும் அன்பர்களின் தன்மை எத்தகையது......

முதலாவது வகுப்பிற்கு முன்னுள்ள பாலர் வகுப்பிற்குரிய ஒழுங்குமுறை எதுவோ அதுவேயாகும். அதாவது பூமியை பண்படுத்துவது வேறு, பூமியை பண்படுத்திவிட்டால் போதுமா? வித்தும் விதைக்க வேண்டுமே!... அவ் வித்தைத்தான் காட்டியருள ஞானகுரு வந்தாக வேண்டும்.

அதுபோல, உடம்பினுள்ளிருக்கும், மறை பொருளின் அணு ஒளியை, மறைத்திருக்கிற மும்மலங்களை அவ்வழுக்காறு திரைகளை நீக்க வேண்டுமேயானல், ஞான மருந்து நீரால் கழுவ வேண்டும்.

உடம்பில் வெளியேயிருக்கும் கண்ணிற்கு தெரியும் அழுக்கை நீரால் கழுவுவது போல, உடம்பினுள்ளிருக்கும் அப்பூமியையும் பண்படுத்தி அங்குள்ள அழுக்காறை அத்திரைகளை நீக்கிக் கொள்ளவும் கண்டிப்பாய் ஞானகுரு வழி காட்டியாக வேண்டும்.

அவ்வழுக்காறு திரைகளை நீக்கினல்தான் நூலையும், அதன் உட்பொருளையும் கண்ணுரக் காணவும் முடியும் என்பதே!

இவ்வுண்மையைத் தெரியாமல் காலத்தை, அருமையான மனிதப் பிறவியை வீணுக்கி விடாதீர்கள் என்பதே முறையீடு.

ஆணவம், கன்மம், மாயை என்றும் மும்மலங்களென்றும் அழுக்காறு என்றும் பஞ்சபூதங்கள் என்றும், பல வார்த்தைகளை அடுக்கடுக்காய் மனப்பாடம் பண்ணிவைத்துக் கொண்டு, தெரிந்த மாதிரி மற்றவர்களுக்கு சொல்லிக் காலத்தை வீணுக கழிப்பது யாருக்கும் நல்லதல்ல! அவை கேடு விளைவிக்கும். ஏட்டில் எழுதியதை மட்டும் காண்பதால் எவ்வித பிரயோஜனமுமில்லை. என்பதை வேதசுருதிகளெல்லாம் கருணையுடன் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வீடு முழுவதும் முட்டித் ததும்பி நிறைந்திருந்த இருட்டைப் போக்க ஒரு சிறிய தீபம் ஏற்றியதுமே! ஒரு

இஞ்சு சுடரொளியில்தான் தானகை வந்து சரணுகதி அடையக் காண்கிறேமே!

அதுபோல நம்மிலிருக்கும் அழுக்குகாறுகளான ஏழு திரைகளை நீக்கினல் அங்கே தயாராக இருந்து மிளிரும் ஞான தீபம் காட்சி தருமே! வீட்டிருள் போக வென்று விளக்கினை ஏற்ற வேண்டியதில்லை. நம் எண்சாண் உடலின் வீட்டிற்கு அங்கேயே தயாராக இருக்கிறதென்பதையும் இவ்விளக்கத் தால் நன்கு உணரலாம்.

மேலும் வேதம் என்ருல் ஒன்றே ஒன்றுதான். வேதங்கள் பல அல்ல!... எல்லா தேச நாடுகளிலும், எல்லா மொழிகளிலும் எல்லா மத வேதங்களிலும் ஒரே குரல் ஒரே கொள்கை, ஒரே வழி,

எப்படி வருடத்திற்கு பன்னிரண்டு மாதங்கள்தான். ஒருவாரத்திற்கு ஏழு நாட்களேதான், பன்னிரண்டு இராசி கள்தான். முதல்வார நாள் ஞாயிறு முதல்தான் துடங்கும். இவைகளில் எங்காவது மாறுதல் காணமுடியுமா?... எப்படி அமைந்துள்ளது. அமைக்கவில்லை யாரும், அமைந்த ஒன்று.

வாழையடி வாழைதான் உயிர்களனைத்து தோற்றமும், நிறங்கள், மொழிகள், மதச்சடங்குகள் ஆங்காங்கே வேறு பட்டிருக்கலாம். அவைகளனைத்தும் கடலில் எல்லா நதி தண்ணீரும் சரணுகதி அடைவது போல ஒரு கொள்கைதான் மறுப்பில்லை.

மத வேதங்களும், தேவாலயங்களும் ஒரே நோக்குட னேயே ஒலித்து முறையிட்டுக் கொண்டிருக்கிறது.

காரணம் மறைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது, அருளாளர்கள் பாடிய எந்த அருட்கவிக்கும், வசனத்திற்கும், இருவிதக் கருத்துக்களை கருணையுடன் சொல்லி நடுநாயக மாகவைத்து மறைபொருளாக அமைந்திருக்கும் உண்மையை அனுபவமில்லாத வழிநடக்கப்படாத முடியாதவர்கள் உட்க் கருத்தை மறுக்கவோ, எதிர்க்கவோ வேண்டியதில்லை. அது

கூடவும் கூடாது. இவ்வுண்மையை அனுபவ வழியில் வளர, வளர அதன் உட்கருத்தை தெரிந்து கொள்ள முடியும், அது வரையும் காத்திருக்க வேண்டியதே அவசரப்படக் கூடாது. வழிகாட்டி குருநாதன் கிடைக்கும் வரை எதையும் தன் கல்வியால் மறுக்க வேண்டாம்

மேலும் ஊழ்வினை உறுத்து வந்து, ஊட்டும் என்பதை யாரும் மறுத்துவிட முடியாத ஒன்றுதான். ஊழ்வினை எப்பொழுது எதனுல் யாரால் தோன்றியது என்பதையும், நாம் தெரிய வேண்டியவர்களாவோம்,

எல்லாமே அடித்தளக் கோளாறுகளே! நம்முடைய வினைச் செயல்களுக்குத் தக்கபடியேதான், இன்பமும், துன்பமும், லாபமும், நஷ்ட கஷ்டங்களும், மரண பயமும், நோய்களும், வரும் என்பதையும் நாம் தெரிய வேண்டியவர்கள், இவ்வலிமையுள்ள ஊழைமாற்றித் திருத்திநல்லவைகளை, அமைக்க வேண்டுமேயானுல், இந்த ஜென்மா பயனை அடைய வேண்டுமானுல், நம் முன்னுேர்கள் காட்டிய வழியின்படி நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தாகவே வேண்டும் இதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது.

அப்படியானுல், ஊழை அதன் கொடூரத்தை, அதன் வலிமையை அகற்றலாம். மனிதனுல் முடியாதது ஒன்றுமேயில்லை. உணர்ந்து நடக்காத கோளாறுகளே! ஏன்? நாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ முடிகிறதில்லை. என்பதையும், நாம் தெரிந்து கொள்ள வேண்டும்

நடமாடி பேசும் மனித தெய்வமாக இருந்தும், கீழான நிலையில் மனிதத் தன்மையிலிருந்து விலகி விட்டோமே என்பதை காலங் கடந்த இந்த தருணத்திலாவது, உணர்ந்து செயல் பெற வேண்டும், என்பதை மேலும், வலியுறுத்தப் படுகிறது. செவி தருக செயல் பெறுக! கல்வியில் இருபிரிவுகள் இருக்கிறது. பள்ளியில் படிக்கும் உலகியல் கல்வி இது உண்ண உணவிற்கு ஊதியம் தேடும் வகையைச் சேர்ந்தது.

அடுத்த கல்வி சாகாக் கல்வி. இது அழியாப் பொருளின் உண்மைத் தத்துவத்தை அறியும் கல்வி.

முதலாவதாக, உலகியல் கல்வியை மற்ற ஏனையோர்களுக்கு எடுத்துரைக்க ஆயிரமாயிரம், ஏன் லட்சாதி லட்சம் பேர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு பேச வேண்டியவைகள்.

இரண்டாவதாக சொல்லப்பட்ட அறியும் அறிவைப் பெற வேண்டி உணமைத் தத்துவமான சாகாக் கல்வியை தெளிவுப்படுத்த இருவருக்கு மேல் கூடவே கூடாது.

இதுவகையில் நமது ஔவை பிராட்டியார் வரையறுத்துக் கூறியது என்ன!

களவிற்கு ஒருவன். கல்விக்கு இருவர், இவ்விரண்டு வார்த்தைகளையும், ஒரே வரியில் இணைத்துக் கூறக் காரணமென்ன?

களவு என்று ஒரு சொல்லும், செயலும், ஏற்படுமானல் ஒருவன் செய்தால்தான் களவு. இருவர் சேர்ந்து களவு செய்தால்! அதற்குப் பெயர் களவு அல்ல!

அதே போல, சாகாக் கல்வியை பரிமாற வேண்டுமானல் அந்தயிடத்தில் இருவருக்கு மேல் இருக்கவே கூடாது.

அப்படி இருவருக்குமேல் இருந்தால் அது சாகாக் கல்வியாகா. அப்படியானல் அது உலகியல் பிழைப்பிற்குறிய கல்வியேயாகும். இந்த நிலையில் குருவும், சீடனும், என்பதும் இவ்விருவருமேதான். முதன் முதலில் குருவழிகாட்டுவதென்றல் ஒவ்வொரு தகுதி வாய்ந்த சீடனுக்கும், உப்படி பல சீடர்கள் குருவழியில் நடக்கப்பட்டவர்கள் இணைந்து உறவாடுவதே, கூட்டு வழி பாடாகும்.

இவைகளை எதற்காக இத்தருணத்தில் சொல்லப்படுவதென்றல். இக்கட்டுரையே, சாகாக் கல்வியில் எழுந்ததொன்ருகும்.

இவைகளிலும், அடக்கமாக பரிபாஷைகளாக, அறிய வேண்டியவைகள் அனந்த முண்டு.

இவ்வெளியீடு ஏட்டில் பிரச்சுரமாகியிருந்தாலும், குரு நாதன் தொட்டுக் காண்பித்ததாகவும், வேண்டியதே! அப்படியானால்தான் அவ்வழி தெரிந்துச் செயல் பெற முடியும்.

இவைகளெல்லாம் உலகியலில் படித்த பள்ளிப்படிப்பு அல்ல, என்பதையும், இது மூலம் தெளிவு படுத்தப்படுகிறது.

பக்கம் பக்கமாகவுள்ள இக்கட்டுரை சாதாரணமான தல்ல, என்பதையும், வேதங்களில் அதாவது புத்தகத்தில் காணவே முடியாதென்பதையும், கண்டு கொள்ளவும் முடியும். இது அனுபவநூல் என்ற முடிவும் இதனால் தெள்ளத் தெளிவாக விளங்கும்.

நம்மவர்களுக்கேற்படும், சந்தேகமும், கேள்வியும், எழுவதற்கு தெளிவு தரும் விளக்கங்களும் வருகிறது.

நல்வர்களும். கெட்டவர்களும், படித்தவர்களும், படியாதவர்களும், பணம் படைத்தவர்களும்; பணமில்லாத ஏழைகளும், மற்ற ஏனையோர்களும், மண்ணோடு மண்ணாக ஆகிவிடுகிறார்கள்!

அதுபோல சிவபூஜையை ஆயுள்வரை இடைவிடாமல், வைராக்கியமாய் பூரண நம்பிக்கையில் மணிக்கணக்கில் செய்து வருபவர்களும், யோகிகள், ஞானிகள், உட்பட உத்தமர்களெல்லாம் ஏன் இரண்டறக்கலந்தவர்களெல்லாம் மண்ணோடு மண்ணாய் ஆகி விடுகிறார்களே

தவிரவும், பிரம்மச்சரியம் எப்பொழுது மலர்கிறது! என்றால், இல்லறத்தில் நுழைந்து ஒரே ஒரு மகவை மட்டும் பெற்று அதன் பின்னரே, தான் பிரம்மச்சரியம் மலர்கிறது.

அதுவும் ஒரு மகவைப் பெற்றெடுத்ததும் தங்களின் ஜென்மாக் கடன் அத்துடன் முடிவடைந்தும் விடுகிறது.

அப்பால் பிரம்மச்சரியமே! இவ்விருவரும் அப்பா, அம்மா என்ற பட்டம் வாங்கிய பிறகு ஒரு மகவைப் பெற்ற பிறகு இவ்விருவரும், குருவும் சீடனுமாக ஆகியும் விடுகிறுர்கள்.

இவர்சள்தான் பிரம்மச்சரியம் விரதம் கொள்ள தகுதியுள்ளவர்கள்! என்பதுவே அனுபவ சாஸ்திரம்,

இப்படியுள்ள உத்தமர்கள் இக்கலியுகத்தில் பத்துக் கோடிக்கு ஒருவரே இருக்கலாம்.

கோடியிலே ஒருவனுண்டு என்று சொன்னது பல் நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்திருக்கலாம். இப்பொழுது இல்லவே இல்லை. காரணம் இக்கலியுகத்திலுள்ள நாழ்தான். மசவை தோற்றுவிப்பதற்கு வித்தை என்றைக்கு விதைத்தோம், அதற்கு குறிப்புகள் எடுக்கப்பட்டதா? முன் எச்சரிக்கையில் இருந்து செயலாக்கப்பட்டால்தானே இக்கணிதம் சரியாகும்!

ஆனால், எந்த ஸ்தானபனத்திலும் பிரம்மச்சரியம் என்றே, துறவிகள் என்றே, இருக்கப்பட்டவர்களில் யாராக இருப்பினும், அவர்களெல்லாம் கடமையில் தவறியவர்களே! முன் காட்டியது போல்? மறுக்க முடியாதே! இவைகளெல்லாம் வேதத்திலே, தர்க்க வாதத்திலே விளங்காது என்றே மறைகளில் காண முடிகிறது.

காரணம், இம்மாதிரி செயல்களெல்லாம் மறைக்கு அப்பாலாய் என்றுதான் முறையிட்டிருக்கிறது! கற்பனையல்லவே இவைகள், முன்னவர்கள் கண்டனுபவித்த உண்மையுமிது! தவிறவும், இம்மாதிரி, துறவிகள், பிரம்மச்சரியங்கள் பரந்த உலகத்தில் எல்லா மதங்களிலும், எல்லா இனங்களிலும், எல்லா மொழியினர்களும் இருக்கலாம்.

ஆனல் அவர்களில் ஜீவகாருண்யமுள்ள கொல்லாமை எனும் விரதம், பூண்டொழுகப் பட்டவர்களேதான் இதற்கு தகுதியுடையவர்கள்.

நம் மூதாதைகள் நமக்கு தந்திருக்கிற அனுபவமுள்ள, ஒரு சில பரிபாஷையாக அமைத்திருக்கும், வார்த்தைகளை இங்கு இது சமயம் குறிப்பிட்டு, அதன் உண்மையை விளக்கி கூறுவோம்.

வேகாத்தலை, சாகாக்கல்வி, மயிர்ப்பாலம், பாலாறு என்பதே!

வேகாத்தலையைக்காண, சாகாக் கல்வி மூலம் நூலேணி கொண்டேறி, மயிர்ப்பாலம் வழி நடந்து, பாலாறையும் கடந்து உள்ளே அங்கு சாகாமல், வேகாமல், என்றும் இளமையாய், பூரணமாய் எங்கும் பொங்கி முட்டித் ததும்பி வடியும். அருள்வடிவை அக் கண்கொள்ளாக் காட்சியை, கண்ணுள்ளோர், தன் முன்னே கண்டுய்யலாம் என மறைகளெல்லாம், பறை சாற்றுகிற அக்கருணையை என்னென்று சொல்வது. சொல்வதற்கு வாய்தான் உண்டா! அதற்கு மொழிதான் ஏது?

ஆனதினாலே இவ்வருமையான அருள் பெருக்கைக் காண, வழி காட்டி குரு வந்தாகவும் வேண்டுமே!

பள்ளிப் படிப்பின் ஆராய்ச்சிக்குட்ப் பட்டதல்லவே இது. காரணம் மறைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது.

அதுவும் கலித்துக் கொண்டேயிருக்கும் அப்பரிணமத்தை கணக்கால் அளந்து கொள்ளவும் முடியாது, அது அளவு கடந்ததாகவும், கண்கொள்ளாக் காட்சியாகவும் அமைந்திருப்பதையும் இக்கட்டுரை மூலம் தெரிந்து கொள்ளலாமே!

ஆனதால் இவ்வுண்மையைக் கண்டுய்ய ஞான குருவை தேடி அவரடி பணிந்து வணங்கி வழி நடப்போமாக.

தமிழ் வாழ்க! தமிழ்நாடு வாழ்க! தமிழ் மறைகள் வாழ்க! தமிழினம் கூடி வாழ்க! கொல்லாமை எனும் விரதம் எங்கும் பரவி உலக மனைத்தும் வாழ்க, வாழ்கவே!

# வேண்டியது பெறலாம்

திருமதி, உமாதேவி பத்மநாபன் அவர்கள்,
*9/37 திரௌபதி அம்மன் கோயில்-தெரு,*
அரியாங்குப்பம் — புதுவை–7
PIN—605007-

---

"வேண்டியது பெறலாம்" யாரிடம் பெறலாம்? எப்பொழுது பெறலாம். இந்த வினு எழுவது இயற்கை நியாயமான எதையும் நிர்மலமான மனதோடு கேட்டால், கேட்டவை அனைத்தும் அவரவர் தகுதிக்கேற்ப வழங்கப் படும். யாரிடமிருந்து? ஒப்பற்ற தலைவனை இறைவனிட மிருந்து அவனைச் சார்ந்திருக்கும் இறைவியிடமிருந்து ஒப்பற்ற பரம் பொருளைத் தாயாக, தந்தையாக, நண்பனாக, நல்லாசிரி யனுமாகவே அடியார்கள் கண்டு வழிபட்டு, வணங்கி வந்தனர். வள்ளலார் "அப்பா! நான் வேண்டுதல் கேட்டருள் புரிய வேண்டும்" என்று உரிமையுடன், தந்தையாரிடம் மகன் கேட்பது போல் பணிவன்புடன் கேட்கின்றார். சுந்தரரோ, அவரைத் தோழராகக் கொள்கின்றார். அப்பரோ எஜமானனாகக் கருதுகிறார் ஒவ்வொருவரும் தத்தமக்கேற்ற வகையில் இறைவனைக் கண்டு வணங்குகிறார்கள். அவனிடம் தாங்கள் விரும்பியவற்றைக் கேட்டுப் பெறுகின்றார்கள்,

சிவபெருமான் முழுமுதற் கடவுளாகப் போற்றப்படு பவர். அன்பும், கருணையும் கொண்டவர். 'சிவாயநமவெனச் சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை'. என்கிறது திருமந்திரம், அந்தத்] திருமந்திரமோ ஈசனின் புகழைப் பாடித் துதிப்பது. அந்த மந்திரத்தை மிஞ்சி எந்த மந்திரமும் இல்லை என்பதும் பெரியோர் வாக்காம். சிவபெரு மான் காட்சிக்கு எளியன். தியாகசீலன், திருமுடியில் பிறைச்

சந்திரனுக்கும், வானதிக்கும் இடம் கொடுத்தான். தன்னுடைய வெள்ளிப் பனிமலையை, தன்னிடம் புகலடைந்த அடியவர்கள் வசிப்பதற்கு அளித்துத் தான் சுடுகாட்டில் கோயில் கொண்டான். காமதேனுவையும், கற்பகத்தருவையும், சிந்தாமணியையும், மற்றும் பல அரிய பொருட்களையும் தேவர்களுக்குத் தந்தான். பாற்கடலில் பிறந்த திருமகளைத் திருமாலுக்கு அளித்தான். உயிரை ஓம்பும் அமிழ்தத்தைத் தேவர்களுக்கு ஈந்தான். தேவரை வாழ வைக்க, உயிர்கள் உய்ய, கொடிய விடமான ஆலகால விடத்தைக் கால காலனான இறைவன் அருந்தித் தனது அழகிய செம்பவள மிடற்றில் நிறுத்தி நீலகண்டனுனன். இத்தகையவன் நாம் வேண்டுவதைத் தரமாட்டான் என்பது அறியாமையே யாகும். கேட்டுத் தராமலிருப்பது பெற்றோர் செயலாக ஒரு வேளை இருந்தாலும் இருக்கலாம். ஆனுல் இறைனே தாயினுஞ் சாலப் பரிவுடன் இருப்பவன். அவன் வாளா இருந்தாலும் அவனை அணைந்து நிற்கும் அன்னை பராசக்தி வாளா இருக்கமாட்டாள் அத்தனை தூண்டிச் செயல்பட வைப்பவள் அவளே, சிவம் ஒருகணம் தாமதித்தாலும், சக்தி தாமதித்ததேயில்லை. சக்தியின் நினைவே, தூண்டுதலே சிவத்தின் செயலாக இருக்கும் போது, இறைவனை வேண்டிக் கிட்டாதது யாதும் உளதோ. வினைப்பயனுக்கும், மனப்பாங்குக்கும், பரிபக்குவத்துக்கும் ஏற்ப வேண்டப்படுபவை உடனேகிடைக்காமல் காலந்தாழ்க்கலாமேயன்றி, நியாயமாக வேண்டப்படுபவைகன் ஒருக்காலும் கிட்டாமற் போகாது. உலகத்தையே ஈன்ற உமையம்மைக்குத் தானே, உயிர்களின் விருப்பு, வெறுப்புகளும், தேவைகளும் நன்கு தெரியும். அவளைத் தன்னுடலில் இடபாகத்தில் வைத்திருக்கும் இறைவன், அவளுக்கு மதிப்பு தருவதற்காகவாவது அவள் வழி நிற்கத்தானே வேண்டும். எனவேதான் வேண்டுபவர்கள் முதலில் அம்மையை வேண்டிப் பின் அத்தனை வேண்டுகின்றூர்கள். அம்மையை வணங்கி, வேண்டுவதால் விரும்புவது எளிதில் பலிதமாகிறது. இறைவனுவது தன்னடியார்களைப் பலவிதத்தில் சோதனை செய்தது உண்டு. ஆனுல் உலகத்தாயான அம்மையோ, உடுக்கையிழந்தவன் கைபோல்

உடனே உதவும் தன்மையள். தன்னுடைய அன்பர்களுக்கு கனம் தருவதில் ஈடு இணையற்றவள். சிவத்தின் அருள் கிட்ட வேண்டுமானல் தேவியை நாட வேண்டியதேசிறப்புடைத்து அவள் அருளாட்சி செய்யும் இடம், எல்லா வளங்களும் பெற்றுப் பொலியும் என்பதில் ஐயமில்லை. இதனைக் குமரகுருபரர் தமது மதுரைக் கலம்பகத்தில், தடாதகைப் பிராட்டியாய் வந்து ஆட்சி செய்த, ஆலவாய் மீனுட்சி யம்மையைப் பற்றி அழகாகக் கூறுகின்ருர்.

*உடையதொர் பெண்கொடி திருமுக மண்டல*
*மொழுகு பெருங் கருணைக்*
*கடலுத வுஞ்சில கயல்பொரு மொய்ம்புள*
*கடவுணெ டும்பதியாம்*
*புடைகொள் கருங்கலை புனைபவள் வெண்கலை*
*புனையுமொர் பெண்கொடியா*
*வடகலை தென்கலை பலகலையும் பொலி*
*மதுரைவ ளம்பதியே.*

என்று மதுரைக் கலம்பகம் கூறுகின்றது,

வேண்டுவர்க்கு வேண்டியாங்கு தரும் அம்மையப் பனிடம் போகாதது யார் குற்றம்? நம்முடைய குற்றம் தானே. "அழுத பிள்ளை பால் குடிக்கும்" என்பார்கள். அப் படியிருக்க நாம் போய் நமக்கு வேண்டியதைக் கூறி, கெஞ்சிக், கூத்தாடி, அதற்கும் மனமிராங்காவிடில் அழுது, புலம்பியாவது பெற முயற்சி செய்வதுதானே நம் முடைய கடமை, முதலைக் கண்ணீர் வடிப்பதோ, வரட்டு வேதாந்தம் பேசுவதோ, போலி வேஷம் போடுவதோ மட மையிலும், மடமை. ஆத்ம சுத்தியுடன் காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்க நின்று கேட்டால் விரும்பியது கிடைக்காமலா போய்விடும். அப்படி வேண்டுபவர்களை எதிர்நோக்கித் தானே இறைவன் காத்துக் கிடக்கிருன். அதை உணர்ந்த தால்தான்,

*வருவார்! அழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே*
*வந்தால் பெறலாம் நல்ல வரமே!*

என்று வள்ளலார் கூறுகின்றார். வரங்கேட்கும் அடியவர்கள் வந்தால், ஈசன் தானே வருவான். ஆகவே அடியவர்கள் வந்து, அவனிடம் நல்ல வரங்களைப் பெறலாம் என்கிறார். பல தத்துவப் பொருட்களை உள்ளடக்கியது இந்த அடிகள். பிரித்துப், பிரித்துப் பார்ப்போமேயானால். பொருள் விரிவு பட்டு அழகாக விளங்கும். வடதிசை என்று குறிப்பிடு கின்றார். வடதிசையில் உள்ளது மேரு. அந்த பொன்மய மேருவில் உறைபவன் முக்கண்ணன். அவன் வருவான், எங்கே? வடஊருக்கு எதற்காக? வரும் அடியவர்களுக்கு நல்ல வரங்களை நல்குவதற்காக, எங்கெங்கு அடியவர்கள் தன்னை உள்ளன்புடன் நயக்கின்றார்களோ, அங்கெல்லாம் சென்று அருள்பவன் இறைவன்.

கருணைக் கடலாக, அருட் கொண்டலாக, அம்மையப் பன் இருக்கும் போது, எதற்கு அஞ்சுகின்றாய் மடநெஞ்சே! என்று அடியவர் ஒருவர் தம்மைத் தாமே வினவிக் கொள்கின்றார்.

ஏன் கவலைப்படுகின்றாய்? எதற்காகக் கவலைப்படு கின்றாய். வண்டுகள் சப்திக்கின்றதும், தேனிறைந்த மலர்களை கொண்டதுமான கடம்ப மலர் வனத்தில் நிற்பதுகற்பகத்தரு போன்ற இறைவனும். அந்த கற்பகத்தரு நமக்கு வேண்டி யதையெல்லாம், அளிக்கவல்லதோடு, அச்சத்தையகற்றி இன் ன்அருள் புரியக்கூடியதுமாகும். அந்த கற்பகத் தருவினை யணைந்து நிற்கும் பச்சைப் பசுங்கொடியோ வெனில் அருளிலும், கருணையிலும் ஒப்பற்றது. அவளை வேண்டினல் தேவர்களிடமுள்ளதைப் போல். கற்பக விருட்சங்களையும். சிந்தாமணியையும். காமதேனுவையும்; மற்றும் விரும்பும் எல்லாவற்றையும் அளித்தருள்வாள்.

> ஏனின் றிரங்குதி யேழைநெஞ் சேவண் டிமிர்கடப்பங்
> கானின் றதுவுமொர் கற்பக மேயந்தக் கற்பகத்தின்
> பானின்ற பச்சைப் பசுங்கொடி யேமுற்றும் பாலிக்குமாற்
> றேனின்ற வைந்தருச் சிந்தாமணியொடத் தேனுவுமே.

என்று கூறுகின்றது மதுரைக் கலம்பகம். கற்பகம்விருட் சத்தை யொத்த சிவபெருமான், அருள் செய்ய ஒருவனை

முனிவானேயாயின், அவனைச் சார்ந்துள்ள, மரகதக் கொடி போன்ற உமையம்மை முனியாமல் நாம் விரும்பும் வரங்களைப் பரிவுடன் அளிப்பாள். அப்படியிருக்க எதற்காக நீ வருந்தவேண்டும் என்று கேட்கிறார். அம்மையப்பனை அடைந்தவர்க்கு எதிலும் குறையில்லை என்பது குறிப்பு. அம்மையைத் தொழுபவர்கள், இறைவனையும் சேர்த்தே வணங்குவார்கள். இதை அபிராமி அந்தாதியில், பலவிடங்களில் காணலாம். அம்மை புகழ் பேசினாலும் ஐயனை ஒதுக்குவது இல்லை. அதேபோல் அம்மையை விலக்கி ஐயனை மட்டும் ஏத்துவது இல்லை, சிவமும் சக்தியும் சேர்த்தே வழிபாடு செய்யப் பெறுவர் அவர்களைப் புகலடைந்தவர்க்கும் எந்த துன்பமும் இல்லை ஏனென்னில்,

> தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
> மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
> இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
> கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே!

என்று பட்டரால் பாராட்டப் பட்டவளாயிற்றே. அவர் வாக்குப் பொய்க்குமா? அதைப் பொய்யாக்கத்தான் தேவி விடுவாளா?

# நடுவு நிலைமை

திரு, கா. கு. சண்முகம் அவர்கள்,
காவிலிபாளையம்
கோவை மாவட்டம்:

நடுவு நிலைமை என்றால் வேறுபட்ட இரு கட்சிகளிலும் சேராமல் பொதுவாக நிற்றல் என்று பொருள்படுகிறது. நேர்மையும், நீதியும் தவறாது நன்னிலையில் நிற்றல் என்றும் பொருள்படும் முக்கியமாக அவைகளில் சாட்சி, தீர்ப்பு சொல்லும் போது, பாரபட்சமில்லாமல் கூறுதல் என்றாலு பொருந்தும்,

திருமந்திரம் எழுதிய திருமூலர், நடுவு நிலைமையால் வரும் நன்மையைப் பின்வரும் பாட்டிலே சொல்கிறார்,

''நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி யானும்நின் றேனே ;'

நடுவு நின்றார்க்கு அறிவும், இன்பமும் உண்டாகுமே அன்றி அல்லாதார்க்கு அல்ல என்பது கருத்து, நடுவு நில்லாதார்க்கு ஏன் அறிவுச் செல்வம் இல்லைஎன்றால், மெய்ப் பொருளுக்கும் பொய்ப் பொரு ளுக்கும்நடுவில்நின்று காய்தல் உவத்தல்இன்றி ஆராய்ந்தால்தான் அறிவு ஏற்படும். நடுவு நிலைமை தவறி ஆராய்வாருக்கு அறிவாகிய உண்மை புலப்படாது என்பது புலனாகிறது,

நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை என்றதனால் நடுவு நில்லாதார்க்கு நரகம் கிட்டும் என்பது தெளிவாகிறது, அந் நரகம் எத்தகையது என்பதைப் பின்வரும் ஔவைப் பாட்டியின் பாட்டில் அறியலாம்,

''வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாளமூலி படருமே — மூதேவி
சென்றிருந்து வாழுமே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை.

நடுவு நிலைமை தவறுவதால், சில சமயங்களில் சிறிது நன்மை வரினும் இறுதியில் அது பெருந் தீங்கையே கொடுக்கும். ஆதலால் அத்தகைய செய்கையை உடனே ஒழித்துவிட வேண்டும், என்று குறள் கூறுகிறது.

''நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்''

சுயநலமும், பேராசையும் கொண்டு, கடமையையும் மறந்து, நடுவு நிலைமை தவறி நடந்து கொள்கிறார்கள் சிலர், அவர்கள்

ஏழைகளிடம் ஒருவிதமாகவும், செல்வர்களிடம் ஒருவித மாகவும் நடந்து கொள்கிறார்கள். உற்றாரிடம் ஒருவிதமாக வும். மற்றையோரிடம் ஒருவிதமாகவும் நடந்து கொள்கிறார் கள். இத்தகையோர்க்கு மேல்கண்ட குறள் எச்சரிக்கையாய் இருக்கட்டும், நடுவு நிலைமை தவறுதலே எல்லாத் தீமைகளுக் கும் முக்கிய காரணம் என்று விவேகானந்தர் கூறுகிறார். ("Think that partiality is the chief cause of all the evils.")

திருவள்ளுவர் நடுவு நிலைமையை 'நன்றியறிதல்' என்னும் அதிகாரத்துக்கு அடுத்தபடியாகக் கூறியதால், நன்றி யறிதலைப் போல் நடுவு நிலைமையையும் போற்ற வேண்டும் எனத் தெரிகிறது, நடுவு நிலைமையே சான்றோரின் அணி ஆகும் என்கிறது குறள்.

*"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபாற்*
*கோடாமை சான்றோர்க் கணி"*

"நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவில் நின்ற நடுவே" என் இறைவனைப் பாடினார் இராமலிங்க அடிகள். நல்லாரைக் காத்தலும் பொல்லாரை ஒறுத்தலும் அவர் செயல்களானா லும், நல்லாரை உவத்தலும், பொல்லாரைக் காய்தலும், இல்லை. எனவே அடிகள் அவ்வாறு பாடினார்,

இறுதியாக திருவாசகத்திலே நடுவுநிலைமைபற்றிப் பேசப் படுகிறது. திருவாசகத்தின் பக்திப் பாடல்களில் மணிவாசகர் இறைவனைப் பிரிந்தும், உலக வாழ்வில் பிணைந்தும் வருந்து வதையே எடுத்துரைக்கிறார். அவற்றுள் ஒன்று பின் வருவது.

"கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடிலாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவதெல்லாம் நான் பட்டாற்
பின்னைப் பயனென்னே?
கொடுமா நரகத் தழுந்தாமே காத்தாட்
கொள்ளுங் குருமணியே!
நடுவாய் நில்லா தொழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே?"

இறைவா! நான் நன்மை அடைய வில்லை; ஆனால், கெடுகின் கின்றேன். கேடிலாத உனக்கு அன்றோ அதனால் பழி உண் டாகும்? என்னைநரகத்துள்அழுந்தாமல் காக்கும் சக்திஉனக்கு உண்டு. எனவே, என் குருமணியே, நடுவு நிலைமை தவறாது என்னைக் காத்தருள்க, உன்மெய்யடியானாகிய என்னைக் காப் பாற்றாவிட்டால் நீ நடுவு நிலைமை தவறுவதாகும்." என்று எடுத்துக்காட்டுகிறார். அடியார்களைக் காத்தலே இறைவனின் நடுவு நிலைமைப் பண்பு, வாழ்க நடுவு நிலைமை.

# குமரகுருபரன்

மலர் 28] மார்கழி மீ 1-ம் உ. (16-12-77) [இதழ் 12



தனிப் பிரதி 60 பைசா வருடச் சந்தா ரூ. 7—00

## ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால், திருப்பனந்தாள்

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி

4. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம். மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை,
கௌரவ நிர்வாக ஆசிரியர்.


★

## உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சந்தாதார்களுக்கு அறிவிப்பு | ... | 564 |
| 2. | குமரகுருபரன் விடை பெறுகிறான் | ... | 266 |
| 3. | ஐயாறடைகின்ற போது | ... | 568 |
| 4, | பற்றற்ற கண்ணே பிறப்பறும் | ... | 572 |
| 5. | ஜோதிடமும் அதன் கணிததத்துவத்தில் நாமும் | ... | 580 |
| 6. | வேண்டியது பெறலாம் | ... | 589 |
| 7. | நடுவு நிலைமை | ... | 594 |